செய்தி வெளியீடு எண்: 21 நாள்: 12.04.2018

## *தேனி மாவட்டம், கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டம் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது:-*

*********

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டம் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (12.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், கிராம சுயாட்சி பிரச்சாரம் (Gram Swaraj Abiyan) திட்டத்தின் கீழ் 14.04.2018 முதல் 05.05.2018 வரையிலான நாட்களில் சமூக முன்னேற்றம், கிராமப்புற ஏழை மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் விளக்கிடவும், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திடும் வகையில் வாழ்வாதார வாய்ப்புக்களை பெறுவது குறித்து விளக்கிடும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் தேனி மாவட்டத்தில் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எண்டப்புளி ஊராட்சிக்குட்பட்ட இ.புதுக்கோட்டை, தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டூர் மற்றும் சீலையம்பட்டி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகாபுரி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னூர் மற்றும் தேக்கம்பட்டி ஆகிய 6 கிராமங்களில் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 14.04.2018 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலத்துறையின் சார்பில் சமூக நீதி நாள் விழா கொண்டாடப்பட்டு, அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்,

18.04.2018 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகளில் ஒட்டுமொத்த சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு பேரணி மற்றும் வீடு வீடாகச் சென்று தூய்மை இந்தியா திட்டம், திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கிராம ஊராட்சிகளில் இரட்டை உறிஞ்சிக்குழு உள்ள கழிவறைகளை தன்னார்வலர்கள் மூலம் கட்டுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

20.04.2018 அன்று தீதடுப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மற்றும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் எரிவாயு உருளை (Cylinder) வினை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து செய்முறை ஒத்திகை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், இலவச எரிவாயு இணைப்பு தொடர்பான படிவங்கள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுதல்,

24.04.2018 அன்று கிராம ஊராட்சிகளில் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடத்தி அதில் நோய்தடுப்பு மற்றும் சுகாதாரம், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், சமூக வளர்ச்சி குறித்து

மாணவ, மாணவியர்களிடையே கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

28.04.2018 அன்று அரசுத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து பரிசுகள் வழங்குதல், அரசு நலத்திட்ட உதவிகளை பெற்ற பயனாளிகளின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல் மேலும், தகுதியான பயனாளிகளை நலத்திட்ட உதவிகள் பெற ஊக்கப்படுத்துதல்,

30.04.2018 அன்று மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறையின் சார்பில் மருத்துவ காப்பீட்டுத்திட்டம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பயனடையச் செய்தல்

02.05.2018 அன்று வேளாண்மைத்துறையின் சார்பில் விவசாயிகளின் செலவுகளை குறைத்து வருவாய்யை இரட்டிப்பாக்கும் வகையில் விவசாய திட்டங்கள் குறித்து விளக்க கூட்டங்கள் நடத்துதல்

05.05.2018 அன்று மகளிர் திட்டத்தின் சார்பில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஆகியோர்களிடம் கிராம சுயாட்சி பிரச்சாரம் திட்டம் குறித்து விளக்கப்படுத்துதல்

மேற்கூரிய திட்டங்களை துறைவாரியாக செயல்படுத்தி அதன் அறிக்கையினை உரிய புகைப்படங்களுடன் தினசரி சமர்ப்பிக்க துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் இதுபோன்ற அரசு திட்டங்கள் குறித்த முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பா.திலகவதி அவர்கள், மகளிர் திட்ட அலுவலர் திரு.கல்யாண சுந்தரம் அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கிஷோர்குமார் அவர்கள், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு.சரவணன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி ரசிகலா அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி கிருஷ்ணவேனி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி உமையாள் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**